**மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையில் உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கி பயிற்சி திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.**

## செய்திக் குறிப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவிப் பொறியாளர்களாக நியமிக்கப்பட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு பெற்றுள்ள 246 உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கி, புதியதாக பணியில் சேரும் பொறியாளர்களுக்கான 3 நாள் அடிப்படை பயிற்சித் திட்டத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (11.7.2009) முற்பகல் துவக்கி வைத்தார்கள். கிண்டியில் உள்ள மாசுக் கட்டுபாடு வாரிய அரங்கில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

கடந்த ஆட்சியின் போது அரசுப் பணியிடங்களில் காலியான இடங்களை நிரப்பிட தடை ஆணை விதிக்கப்பட்டது. ஊரகப் பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்ற பெரும் பொறுப்பினை உடைய இத்துறையில் காலிப் பணியிடங்களை நிரப்பாததால் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்துவதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. மீண்டும் கழக ஆட்சி ஏற்பட்டவுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வேலை நியமன தடை உத்தரவினை ரத்து செய்தார். இதன் தொடர்ச்சியாக இத்துறையில் காலியாக இருந்த 17,819 பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படும் என சட்டமன்றத்தில் இத்துறை சார்பாக அறிவிக்கப்பட்டு, அதன்படி அனைத்து காலிப் பணியிடங்களுக்கும் நியமனம் நடைபெற்று வருவதாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசு வேலை நியமன தடை உத்தரவினை ரத்து செய்தவுடன் காலிப் பணியிடங்களை நிரப்பிட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைதான் முதன்முதலாக நடவடிக்கை மேற்கொண்டது. இத்துறையின் பல்வேறு நிலையிலான அலுவலகங்களில் காலியாக இருந்த 17,819 பணியிடங்களில் இதுவரை 17,394 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்கள்.

உதவிப் பொறியாளர்கள் பணியிடங்களைப் பொருத்தவரை, முதன் முறையாக 1998ம் ஆண்டில் கழக ஆட்சியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஊரக வளர்ச்சித் துறையில் பணியாற்ற தேர்வு செய்யப்பட்டு, 191 உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டது. அதன் பின்னர், ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் கழக ஆட்சியில் 2007ம் ஆண்டில் 223 உதவிப் பொறியாளர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணி நியமனம் செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மீண்டும் தற்போது 246 உதவிப் பொறியாளர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணியாற்றிட தேர்வு பெற்றுள்ள 246 உதவிப் பொறியாளர்களுக்கும் பணி நியமன ஆணையை வழங்கி, தொழில்நுட்ப கையேட்டினை வெளியிட்டு 3 நாள் அடிப்படை பயிற்சியையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

ஊரகப் பகுதி மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தும் வளர்ச்சித் திட்டங்களின் உட்கட்டமைப்பு பணிகளை நிறைவேற்றும் பொறுப்பில் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உதவிப் பொறியாளர்கள் தங்களது கடமைகளை சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்றும், செயல்படுத்தும் பணிகளை தரமாகவும், விரைவாகவும், நேர்மையுடனும் நிறைவேற்ற வேண்டும் என்றும், அப்போதுதான் திட்டங்களின் பயன்கள் முழுமையாக மக்களுக்கு கிடைக்கப் பெறும் என்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., மற்றும் ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோரும் கலந்து கொண்டனர்.